# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## தேசிய காணி ஆணைக்குழு

**அரசியலமைப்புக்கான ஒன்பதாவது அட்டவணையின் நிரல் I இற்கான (மாகாண சபை நிரல்) பின்னிணைப்பு II இன் விடயம் 3 இன் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்காக தேசிய காணி ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் அவர்களால் 2024, செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, ஓகத்து மாதம் 16 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **294 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 42.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# தேசிய காணி ஆணைக்குழு

ச.வ.- ஓ. 24/2024

**அரசியலமைப்புக்கான ஒன்பதாவது அட்டவணையின் நிரல் I இற்கான (மாகாண சபை நிரல்) பின்னிணைப்பு II இன் விடயம் 3 இன் ஏற்பாடுகளுக்குப் பயன் கொடுப்பதற்காக தேசிய காணி ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தேசிய காணி ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## தேசிய காணி ஆணைக்குழுவைத் தாபித்தல்

*தேசிய காணி ஆணைக் குழுவைத் தாபித்தல்*

**2.** (1) (இதனகத்துப்பின்னர், "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய காணி ஆணைக்குழு என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையைக் கொண்டிருப்பதோடு பொது இலச்சினையொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது அப்பெயரில் வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக அப்பெயரில் வழக்குத்தொடுக்கவும் படலாம்.

*ஆணைக் குழுவின் அமைத்துருவாக்கம்*

**3.** (1) ஆணைக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்களாக-

(i) காணிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சின் மேலதிக செயலாளர் எனும் பதவிவரிசைக்குக் குறையாத அவரது பிரதிநிதியொருவர்;

(ii) உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக் கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சின் மேலதிக செயலாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாத அவரது பிரதிநிதியொருவர்;

(iii) (464 ஆம் அத்தியாயமான) காணி அபி விருத்தி கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட காணி ஆணையாளர் தலைமையதிபதி;

(iv) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை யின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(v) (441 ஆம் அத்தியாயமான) கமத்தொழில் திணைக்களக் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கமத்தொழில் பணிப்பாளர் தலைமையதிபதி;

(vi) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(vii) திறைசேரிக்கான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியெனும் பதவிவரிசைக்குக் குறையாத திறைசேரியின் பிரதிநிதியொருவர்;

(viii) (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட காடுகள் பேணுநர் தலைமை யதிபதி; அத்துடன்

(ix) (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கின பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் நோக்கத் துக்காக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியாகவுள்ள வனசீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஆ) (இதனகத்துப்பின்னர், "நியமிக்கப்பட்ட உறுப்பினர் கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) காணி, கமத்தொழில், மண் விஞ்ஞானம், காணி பயன்பாட்டு திட்டமிடல், நகர அபிவிருத்தி, நீர்நிலை முகாமைத்து வம் அல்லது பெருந்தோட்டக் கமத்தொழில் என்னும் துறைகளில் அறிவையும் நிபுணத்துவத்தையும் கொண்டுள்ள ஆட்களிடையேயிருந்து சனாதிபதியி னால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்; அத்துடன்

(இ) மாகாணசபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்து வதற்கென ஒவ்வொரு மாகாணசபையினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காணி என்னும் விடயத்தில் அனுபவத்தையும் அறிவையும் கொண்டுள்ள ஒன்பது உறுப்பினர்கள்.

(2) சனாதிபதி, 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர், நியமிக்கப்பட்ட உறுப்பினர் களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண் டும்.

**ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமை யீனங்கள்**

**4.** ஆளொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு, பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்குத் தகைமை யற்றவராதல் வேண்டும்; அத்தகைய ஆள்-

(அ) இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(ஆ) பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பின ரொருவராகவிருப்பின் அல்லது உறுப்பினரொரு வராகவரின்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டு பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்ற வரான அல்லது வங்கிமுறிந்தவரான ஆளொருவராக இருப்பின்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவர் எனக் கண்டறியப்படின் அல்லது வெளிப் படுத்தப்படின்;

(உ) ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனையால் தண்டிக்கப்படற்பாலதான ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஊ) இலங்கையின் அல்லது வேறு ஏதேனும் நாட்டின் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட மறியற்றண் டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்; அல்லது

(எ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அவரது பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கும் சாத்தியமுள்ளதான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருப்பின்.

ஆணைக் குழுவின் நியமிக்கப்பட்ட மற்றும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் களின் பதவிக்காலம்

**5.** ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட மற்றும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பு, பதவி விலகுகை அல்லது அகற்றுகைமூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டு மென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறு வகையின தாயினுஞ்சரி மேலதிக காலப்பகுதியொன்றுக்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீள்பெயர் குறித்து நியமனத்துக்கு தகவுடையவராதலும் வேண்டும்.

நியமிக்கப் பட்ட உறுப்பினர் களின் அகற்றுகை, பதவி விலகுகை முதலியன

**6.** (1) ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்த நேரத்திலும் அதற்கென சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தனது பதவியி லிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகலானது சனாதிபதியினால் அப்பதவி விலகல் எழுத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி, அதற்கெனக் குறித்தளிக்கப்பட்ட காரணங் களுக்காக, நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அல்லது வேறேதேனும் தன்மையில் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலாகாது.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படு வதன்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சனாதிபதி; 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினதும் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித் தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக

இயலாதவராகவிருக்குமிடத்து அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின் சனாதிபதி, (3) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினதும் அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு, அத்தகைய உறுப்பினர் வருகைதராதபோது அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறு எவரேனுமாளை நியமித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவரது வருகையின்மைபற்றி முன்கூட்டியே தவிசாளருக்கு அறிவிக்காமல் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் அத்தகைய மூன்றாவது கூட்டத் தேதியிலிருந்து அவர் தனது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி, (3) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினதும் அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

*பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் அகற்றுகை, பதவி விலகுகை முதலியன*

**7.** (1) ஆணைக்குழுவின் எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர், அத்தகைய உறுப்பினரைப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மாகாணசபையினால் பதவிலியிலிருந்து நீக்கப்படலாம்.

(2) ஆணைக்குழுவின் எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்த நேரத்திலும், அவரை பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மாகாணசபையின் தவிசாளருக்கும் மற்றும் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் அதுசார்பில் முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகுகையானது எத்தேதியன்று மாகாணசபையின் தவிசாளரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுக்கு வருதலும் வேண்டும்.

(3) எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறப்பின்மூலம், பதவிவிலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட மாகாணசபை அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு காணி என்னும் விடயத்தில் அனுபவத்தையும்

அறிவையும் கொண்டுள்ள வேறோராளை பெயர்நியமனம் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்தினால் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின், சம்பந்தப்பட்ட மாகாணசபை அத்தகைய உறுப்பினர் வருகைதராதபோது அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோராளை பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது வருகையின்மை பற்றி முன்கூட்டியே ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அறிவிக்காமல் ஆணைக் குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் அத்தகைய மூன்றாவது கூட்டத்தேதியிலிருந்து அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் சம்பந்தப்பட்ட மாகாணசபை அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு காணி என்னும் விடயத்தில் அனுபவத்தையும் அறிவையும் கொண்டுள்ள வேறோராளை பெயர்குறித்து நியமிக்கப்படுதலும் வேண்டும்.

*ஆணைக் குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிப் படுத்துதல்*

**8.** (1) ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அத்தகைய உறுப்பினராகப் பதவியை ஏற்கமுன்னர் அத்தகைய நியமனத்தின்போது உள்ளவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறைகள் பற்றிய பொதுவான வெளிப்படுத்துகையொன்றை சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவரது பதவிக்காலத்தின் போது ஆண்டுக்கு ஒரு தடவை அத்தகைய வெளிப்படுத்துகையை சனாதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில், உடன்படிக்கையில் அல்லது தொழிலில் அல்லது ஏதேனும் கருமத்தில்

நேரடியாக அல்லது நேரடியாகவன்றி அக்கறையைக் கொண்டுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அவரது அக்கறையின் தன்மையையும் அளவையும் உடனடியாக ஆணைக்குழுவுக்கு வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் ஆணைக்குழுவின் குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய உறுப்பினர், அதன் பின்னர் அத்தகைய ஒப்பந்தம், உடன்படிக்கை, தொழில் அல்லது வேறு கருமம் தொடர்பில் ஆணைக்குழுவின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்கேற்றலுமாகாது.

(3) ஆணைக்குழு, விடயத்துக்கு விடயம் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அத்தகைய அக்கறை பற்றிய இடாப்பொன்றை அல்லது பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் கூட்ட நடப் பெண்ணும் கூட்டங்களும்

**9.** (1) ஆணைக்குழுவின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்தினதும் ஆகக்குறைந்தது ஒரு தடவை அல்லது இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக தேவைப்படுத்தப்படுகின்றவாறாக நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் தவிசாளர் உட்பட பதினொரு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் கூட்டமொன்று, ஒன்றில்-

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றாகக் கூடுகின்றவர்களும் ஒரு கூட்டநடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எண்ணிக்கையினரான உறுப்பினர்களினால்; அல்லது

(ஆ) கூட்டத்தில் பங்குபற்றுகின்றவர்களும் ஒரு கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டத்தின்போது பங்குபற்றுகின்ற ஒவ்வோர் உறுப்பினரையும் ஒரே

சமயத்தில் காணமுடியுமானவர்களாகவும் கேட்க முடிகின்றவர்களாகவும் இருக்கின்ற கட்புல-செவிப் புலத் தொடர்பாடலினால்,

நடாத்தப்படலாம்.

(4) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரினது வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், தவிசாளர் அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், சமுகமளித்திருப்பின், ஆணைக்குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் வருகை தராதிருப்பின் சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் ஆணைக்குழுவின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது அதன் கூட்டங்களுக்கு அழைப்பதிலும் அவற்றை நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

ஆணைக்குழுவின் செயல்கள் அல்லது நடவடிக்கை முறைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாக செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது

**10.** ஆணைக்குழுவானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் எவ்வாறு இருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன் ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கைமுறை, அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளமை காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக இருத்தல் அல்லது செல்லுபடியற்றதாக இருப்பதெனக் கருதப்படுதல் ஆகாது.

ஆணைக்குழு உறுப்பினர்களின் ஊதியம்

**11.** நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசித்து சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய வீதங்களிலுமான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழு கூட்டங்களுக்கு நிபுணர்களை அழைத்தல்

**12.** (1) ஆணைக்குழுவானது, அது அவசியமெனக் கருதுகின்ற போதெல்லாம், அவ்வாணைக்குழுவின் பணிகளை பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்காக ஏதேனும் விடயம்பற்றிய நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத் துக்காக, ஏதேனும் கூட்டத்தில் ஆணைக்குழுவினால் கையாளப் படுகின்ற அத்தகைய விடயப்பொருள்மீதான நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள நிபுணர்களை அத்தகைய கூட்டத்திற்கு அழைக்க லாம்:

ஆயின் எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது அத்தகைய நிபுணர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான முழுமையான தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிபுணர்கள், வாக்களிப்பதற்கான உரிமைகளைக் கொண்டி ருத்தலாகாது.

(3) ஆணைக்குழுவின் கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதற்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மதிப்பூதியம் நிபுணர்களுக்குச் செலுத்தப்படலாம்.

ஆணைக் குழுவின் இலச்சினை

**13.** (1) ஆணைக்குழுவின் இலச்சினை அவ்வாணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினையானது-

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழு காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினையானது, அவ்வாணைக் குழுவின் வலுவளிப்புடனும் அதன் தவிசாளர் மற்றும் வேறோர் உறுப்பினரின் முன்னிலையிலும்தவிர, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள், தாம் சமுகமளித்திருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஆணைக்குழுவின் இலச்சினை பொறிக்கப்படும் போது சமுகமளிப்பதற்கு தவிசாளருக்கு இயலாதிருக்குமிடத்து, அதுசார்பில் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் வேறு எவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, அதன் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

பாகம் II

## ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**14.** (1) பின்வருவன ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளாதல் வேண்டும்-

(அ) தொழில்நுட்ப அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஆனால் அரசியல் அல்லது இனத்துவ அம்சங்களின் அடிப்படையிலன்றி, அரசியலமைப்புக்கான ஒன்பதாவது அட்டவணையின் நிரல் I இற்கான (மாகாண சபை நிரல்) பின்னிணைப்பு II இன் 3:1 என்னும் விடயத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக அரச காணிகளின் பயன்பாடு தொடர்பிலான தேசியக் கொள்கையை வகுத்தமைத்தல்;

(ஆ) மண், காலநிலை, மழைவீழ்ச்சி, மண்ணரிப்பு, வனப்பகுதி, சூழல் காரணிகள், பொருளாதார இயலுமை போன்ற கருமங்களை கவனத்துட் கொண்டு அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் I இற்கான (மாகாணசபை நிரல்) பின்னிணைப்பு I இன் 3:1 என்னும் விடயத்தில் குறித்துரைக்கப்பட்டதான அரச காணிகளின் பயன்பாடு தொடர்பான பொதுவான நெறிகளை விதித்தல்;

(இ) பந்தி (அ) இன்கீழான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதில், அரச காணிகள் தொடர்பில் அவசியமான கருத்தாய்வுகள், பரிசோதனைகள் அல்லது புலனாய்வுகளைக் கொண்டுநடாத்தி அவை பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல்;

(ஈ) ஏதேனும் வங்கியில் நடைமுறை, சேமிப்பு அல்லது வேறு வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தல், பேணுதல் மற்றும் தொழிற்படுத்துதல் அத்துடன், அவசியமெனில், அத்தகைய கணக்குகளை மூடிவிடுதல்; அத்துடன்

(உ) பொதுவாக, ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் இடைநேர் விளைவான அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட அத்தகைய வேறு செயல்களை அல்லது விடயங்களைச் செய்தல்.

(2) ஆணைக்குழுவினால் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் தேசியக் கொள்கை வகுத்தமைக்கப்படுவதன்மேல், அமைச்சர் அத்தகைய தேசியக் கொள்கையை தகவலுக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்; அது அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரின் அமைச்சினது உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழான அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில்,

*அரச காணியின் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு மூன்று நாட்களைக்கொண்ட எழுத்திலான முன்னறிவித்தலைக் கொடுத்தபின்னர், குறித்த நாளின் நியாயமான ஏதேனும் நேரத்தில் ஏதேனும் அரச காணியினுள் பிரவேசிப்பதற்கு ஆணைக்குழுவின் எவரேனும் ஊழியருக்கு அதிகாரமளிக்கலாம்.*

*தகவல்கள்*

***15.*** *(1) இச்சட்டத்தின்கீழான ஆணைக்குழுவின் எவையேனும் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு அவ்வாணைக்குழுவை இயலச்செய்விக்கும் நோக்கங்களுக்காக, ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அரச காணிகள் தொடர்பான அத்தகைய தகவல்களை அல்லது ஆவணத்தை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு கொடுத்துதவும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்தலாம்.*

*(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்றின்மூலம் அதுதொடர்பில் தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனுமாள் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தைக் கொடுத்துதவுவதிலிருந்து தடுக்கப்படுகின்றவிடத்துத் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய தகவலை அல்லது ஆவணத்தைக் கொடுத்துதவுதல் அத்தகைய ஆளுக்குக் கடமையாதல் வேண்டும்.*

*பாகம்* III

## தொழில்நுட்ப செயலகம்

*தொழில்நுட்ப செயலகம்*

***16.*** *தேசிய காணி ஆணைக்குழுவானது, இயற்கை வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பௌதிக அதேபோன்று சமூகப் பொருளாதாரக் காரணிகளை மதிப்பிடுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல்* I *இற்கான (மாகாணசபை நிரல்) பின்னிணைப்பு* II *இன் விடயம் 3:2 இல் குறித்துரைக்கப்பட்டதான இயைபான எல்லாத்துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழில்நுட்பச் செயலகமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

## பாகம் IV

## ஆணைக்குழுவின் பணிப்பாளரும் பணியாட்டொகுதியும்

ஆணைக் குழுவின் பணிப்பாளர்

**17.** (1) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவின் பணிப்பாளரொருவர், ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து, அமைச்சரினால் நியமிக்கப் படுதல் வேண்டும்; அவரது தகைமைகளும் அனுபவங்களும், நியமனம் பற்றிய நியதி நிபந்தனைகளும் விதித்துரைக்கப்பட்ட வாறாக இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர், ஆணைக்குழுவின் பொதுவான பணிப்புக்கள் மற்றும் மேற்பார்வைக்கு அமைய,-

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகம் மற்றும் கட்டுப்பாடு உள்ளடங்கலாக ஆணைக்குழுவின் அலுவல்களினது நிருவாகத்துக்குப் பொறுப்பிக்கப் படுதல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளினதும் நிறை வேற்றுகைக்குப் பொறுப்பாதல் வேண்டும்; அத்து டன்

(இ) ஆணைக்குழுவினால் அவருக்குக் குறித்தளிக்கப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர், ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும், ஆனால், அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

(4) பணிப்பாளர், ஆணைக்குழுவின் எழுத்திலான அங்கீகாரத் துடன், அவ்வாறு செய்வது அவசியமென அவர் கருதுகின்ற போதெல்லாம் இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எதனையும் ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எழுத்தில் கையளிக்கலாம் என்பதுடன் எவ்வலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அத்தகைய ஏதேனும் தத்துவம், கடமை அல்லது

பணி கையளிக்கப்படுகின்றதோ அவ்வலுவலர் அல்லது ஊழியர் ஆணைக்குழுவின் பணிப்புக்களுக்கமைய அவற்றைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(5) பின்வரும் சந்தர்ப்பங்களில் அமைச்சர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பேரில், பணிப்பாளரைப் பதவியிலிருந்து நீக்கலாம்-

(அ) அவர், இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவராகவரின்;

(ஆ) அவர், ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில், மோசடியான அல்லது சட்டவிரோதமான தன்மையைக்கொண்ட அல்லது ஆணைக்குழுவின் நலன்களுக்கு பங்கம் விளைவிக்கின்ற ஏதேனும் செயலைச் செய்திருப்பின்; அல்லது

(இ) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கு இணங்கியொழுக அவர் தவறியிருப்பின்.

(6) பணிப்பாளரின் பதவியானது இறப்பு, (5) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது அத்தகைய பதவியை வகிப்பவரினால் அதுசார்பில் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலமாக பதவிவிலகல் என்பவற்றின்மூலம் வறிதாதல் வேண்டும்.

(7) பணிப்பாளரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், அமைச்சர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பேரில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனமொன்று செய்யப்படும்வரை பணிப்பாளரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்குமென ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரை நியமிக்கலாம்.

(8) பணிப்பாளருக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் பணியாட் தொகுதியினரை நியமித்தல்

**18.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழு அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை வினைத் திறனாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் மற்றும் நிறை வேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப் பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில்–

(அ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோ கிக்கலாம் அல்லது அவர்களைப் பதவிவிலக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(இ) அரசாங்கத்தின் இயைபான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கவும் மற்றும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோ சனையுடனும், அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் எந்த வீதங்களில் ஊதியமளிக் கப்பட வேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயிக்க லாம்.

(3) எவ்வாறாயினும் ஆணைக்குழுவானது, பகிரங்க அல்லது தனியார் துறையில் எவரேனும் ஆளினால் வகிக்கப்பட்ட ஏதேனும் முந்தைய பதவியிலிருந்து பதவிவிலக்கப்பட்டுள்ள அத்தகைய ஆளை ஆணைக்குழுவின் அலுவலரொருவராக அல்லது வேறு ஊழியராக நியமித்தலாகாது.

**19.** (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்போரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் மற்றும் ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

*ஆணைக் குழுவின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையிலுள்ள அலுவலர்களை நியமித்தல்*

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

## நிதி

**20.** (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் நிதியம்*

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்-

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காக காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இலங்கையினுள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலிருந்தோ எத்தகையதுமான மூலத்தி

லிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள், மரணசாதனக் கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையில் ஆணைக்குழு அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் மற்றும் நிறை வேற்றுவதற்காகவும் அத்துடன் அதன் குறிக்கோள் களை மேம்படுத்துவதற்காகவும் அவ்வாணைக் குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், ஆணைக்குழுவுக்குச் செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் அவ்வாணைக்குழுவானது நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினது அமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்*

**21.** (1) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனை ஆணைக்குழு செய்வித்தல் வேண் டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

## பொது ஏற்பாடு

தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைக் கையளித்தல்

**22.** (1) ஆணைக்குழு, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழான அதன் எவையேனும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை தவிசாளருக்கு அல்லது ஆணைக்குழுவின் உறுப்பின ரொருவருக்கு அல்லது பணிப்பாளருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், தவிசாளர் அல்லது அத்தகைய உறுப்பினர் அல்லது பணிப்பாளர், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேட அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

குழுக்களையும் குழாங் களையும் தாபித்தல்

**23.** (1) ஆணைக்குழு, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் உதவுவதற்கென குழுக்களையும் குழாங்களையும் தாபிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் குழுவின் அல்லது குழாத்தின் உறுப்பினர்களாகவிருப்பது அவசியமென ஆணைக்குழு கருதகின்றவாறான அத்தகைய ஆட்களையும் அது நியமிக்கலாம்.

(2) ஒரு குழு அல்லது குழாம், ஆணைக்குழுவினால் அத்தகைய குழுவுக்கு அல்லது குழாத்துக்கு வழங்கப்பட்ட நியதிக் குறிப்பீட்டில் விதிக்கப்பட்டவாறாக அதனது பணிகளை நிறைவேற்றுதலும் அதன் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்தலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, அது அவசியமெனக் கருதுகின்ற விடத்து, இயைபான துறையில் தேவைப்படுத்தப்பட்ட அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள எவரேனுமாளை குழுவொன்றுக் கான அல்லது குழாமொன்றுக்கான ஓர் உறுப்பினராகக் கூட்டுச் சேர்க்கலாம்.

**24.** (1) ஆணைக்குழு, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களினுள், ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் அத்தகைய அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்– ஆண்டறிக்கைகள்

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுக்கான ஆணைக்குழுவின் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட கணக்குகள்; அத்துடன்

(ஆ) அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எவ்வாண்டுடன் தொடர்புடையதோ அவ்வாண்டை உடனடுத்து வரும் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்று.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தின் கவனத்துக்கென பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும்.

**25.** ஆணைக்குழுவின் தவிசாளரும் உறுப்பினர்களும் மற்றும் பணிப்பாளர், ஆணைக்குழுவின் அலுவலர்களும் வேறு ஊழியர்களும் 12 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் கலந்தாலோசிக்கப்பட்ட ஒவ்வொரு நிபுணரும், 23 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுக்களின் அல்லது குழாங்களின் உறுப்பினர்களும், அவரது கடமைகளில் ஈடுபடமுன்னர், இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் அவரது அறிவுக்கெட்டியுள்ள ஆணைக்குழுவின் அலுவல்களுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பான இரகசியத்தை கடைப்பிடிப்பதற்கு வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர அத்தகைய ஏதேனும் கருமத்தை வெளிவிடாதிருப்பதற்கு அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் வாக்குறுதியளித்தலும் வேண்டும்:- இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும்போதும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழான அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கின்ற, புரிகின்ற மற்றும் நிறைவேற்றுகின்ற நோக்கத்துக்காகவும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பணிப்பாளர், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்

**26.** ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களும், ஆணைக்குழுவின் பணிப்பாளர், அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் ஆணைக்குழுவின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழு ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நோக்கத்துக்காக அட்டவணைமயப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்

**27.** ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைமயப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

தவறுகள்

**28.** (அ) பதினான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான தனது பணிகளை அல்லது கடமைகளை புரிவதிலிருந்து அல்லது நிறைவேற்றுவதிலிருந்து எவரேனுமாளைத் தடுக்கின்ற;

(ஆ) பதினைந்தாம் பிரிவின்கீழ் ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தைக் கொடுத்துதவும்படி கோரும்போது அவ்வாறு செய்யத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற; அல்லது

(இ) பொய்யானதென அல்லது பிழைவழியுய்க்கக் கூடியதென அறிந்துகொண்டு 15 ஆம் பிரிவின் கீழான ஏதேனும் தகவலை அல்லது ஆவண மொன்றைச் சமர்ப்பிக்கின்ற,

எவரேனுமாள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவா னொருவரினாலான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒருமாத காலத்தை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

துடர்ச்சியிலான அல்லது குற்ற வழக்கிலான செலவுகள் நிதியத்தி லிருந்து செலுத்தப் படுதல்

**29.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழு வினால் அல்லது ஆணைக்குழுவுக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழு வினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறிவிடப் பட்ட செலவுதொகைகள் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரினால், ஆணைக்குழுவின் பணிப்பாளரினால் அல்லது எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத் தின்முன்னர் அல்லது நியாயசபையின்முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய ஆளினால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப் பட்டாலொழிய, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**30.** (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுவதற்கு தேவைப் படுத்தப்பட்ட அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லா கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்க லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன் றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்

**31.** (1) ஆணைக்குழு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படு வதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்களுள் ஏதேனும் அல்லது எல்லாம் தொடர்பில் அல்லது பின்வரும் கருமங்களுள் ஏதேனும் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:-

(அ) ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு அழைப்புவிடுப் பதற்கும் அவற்றை நடாத்துவதற்கும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையையும் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதையும் ஒழுங்குபடுத்துதல்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவின் அலுவல்களினது முகாமையுடன் சம்பந்தப்பட்ட வேறேதேனும் கருமம்.

(2) ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

பொருள் கோடல்

**32.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் மற்றும் 45 ஆம் உறுப்புரைகளின்கீழ் இச்சட்டத்தின் விடயப் பொருள் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

"குடியிருப்பாளர்" என்பது, தனது சொந்தக் கணக்கின் மீதாயினுஞ்சரி அல்லது வேறெவரினதும் முகவராகவாயினுஞ்சரி, எவையேனும் வளவுகளில் குடியிருக்கின்ற அல்லது அதன் பொறுப்பை, முகாமையை அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்; ஆனால் தங்கியிருப்பவரொருவரை உள்ளடக்காது;

"வளவுகள்" என்பது, ஏதேனும் கட்டிடத்துடன் சேர்ந்த ஏதேனும் காணி அல்லது அதன்மேலுள்ள கட்டிடத்தின் பாகம் எனப் பொருள்படும்; அத்துடன்

"எழுத்திலானவை" என்பதனுள் இலத்திரனியல் முறையில் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் உள்ளடங்குதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல

**33.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.